ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1903/2 - 2015 පෙබරවාරි මස 23 වැනි සඳුදා - 2015.02.23

*1903/2 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டம்**

*52 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டத்தின் 52 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டும், மின்சக்தி மற்றும் எரிசக்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் விதப்புரையின் பேரிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான்,*

*(அ) இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணி, மின்சக்தி கடத்தற் கருத்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு அவசரமாகத் தேவைப்படுகின்றதென்றும் ; அத்துடன்*

*(ஆ) பொதுமக்களின் பொது சேமநலத்திற்கும் நன்மைக்கும் சேவையாற்றுவதாகவிருக்கும் பொது நோக்கமொன்றாகவுள்ள மேற்சொன்ன மின்சக்தி கடத்தற் கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காகத் தேவைப்படுகின்றதென்றும்,*

*அபிப்பிராயப்படுவதால், மேற்சொன்ன காணி சொல்லப்பட்ட நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றதென இக்கட்டளைமூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு - 01,*
*2015, பெப்புருவரி 20.*

**அட்டவணை**

*காணியின் எல்லைகள்*

*இலங்கையின் மேல் மாகாணத்தின் கொழும்பு நிர்வாக மாவட்டத்தில், சல்பிட்டி கோரளையில் ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவினுள் சியம்பலாகொட வடக்கு கிராம அலுவலர் பிரிவில் சியம்பலாகொட கிராமத்தில் அமைந்துள்ளதும், உறுதி செய்யப்பட்ட நில அளவையாளரான சீ. எச். டி. அபயகுணவர்த்தன அவர்களால் அளவிடப்பட்ட, 1992.08.25 ஆந் திகதி கொண்ட 1040 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் $4^{E}$ மற்றும் $4^{D}$ எனக் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளும் அடங்கலாக 5 ஏக்கர் 2 றூட் மற்றும் 6.625 பேர்ச்சஸ் விஸ்தீரண நிலப்பரப்பைக் கொண்ட காணிக்கான எல்லைகள் கீழ்வருமாறு :-*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | *1040 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள பொல்கஸ்ஓவிட்ட - கொட்டாவ பாதை ;* |
| கிழக்கு | : | *1040 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள தெபா எல ;* |
| தெற்கு | : | *1040 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள தெபா எலவும் டீ. எம். மானான, சந்திரா ஜயவீர மற்றும் ஏனையோர் உரிமைகோரும் வயற்காணிகளும் ஓவிட்டவும், டீ. எஸ். வீரவர்த்தன மற்றும் ஏனையோர் உரிமைகோரும் கேனுவில ஓவிட்டவும் ;* |
| மேற்கு | : | *1040 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள டீ. எஸ். வீரவர்த்தன மற்றும் ஏனையோர் உரிமைகோரும் கேனுவில ஓவிட்டவும், லீலாவதி விஜேசிங்க மற்றும் ஏனையோர் உரிமைகோரும் கொஹிலவல வயலும் பி. குணதாச உரிமைகோரும் காணியும் பாதையும் .* |
| விஸ்தீரணம் | : | *5 ஏக்கர் 2 றூட் மற்றும் 6.625 பேர்ச்சஸ்.* |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் : ஏ. எம். ஷானில் பெர்னாந்து.*

*3- 229*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*